# ஹரோ தமிழ் பாடசாலை திருக்குறள் போட்டி 2026

## ஆண்டு - 8 (Year 8)

1/09/2012 - 31/08/2013 **பிறந்தவர்கள்**

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/05/2026

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

மாணவர்கள் 8 குறள்களையும் அதற்குரிய 7 பொருள்களையும் கூறவேண்டும்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல். (குறள் 113)

பொருள்: நடுவுநிலை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மையையே தரக் கூடியதாக இருந்தாலும், அந்தப் பயனைக் கைவிட்டு நடுவுநிலையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள் 110)

**பொருள்:-** எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். (குறள் 77)

**பொருள்:** எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை. (குறள் 434)

**பொருள்:** குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும், ஆகையால் குற்றம் செய்யாமல் இருப்பதே நோக்கமாகக் கொண்டு காத்துக் கொள்ள வேண்டும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (குறள் 138)

நல்லொழுக்கம், அறமாகிய நன்மைக்கு வித்தாக அமைந்து இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும்; தீயொழுக்கமோ துன்பமே தரும்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். (குறள் 997)

பொருள்: மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (குறள் 800)

பொருள்: குற்றம் அற்றவரோடு நட்புக் கொள்க; உலகோடு ஒத்து வராதவரின் நட்பை விலை கொடுத்தாவது விட்டு விடுக.

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. (குறள் 1008)

பொருள்: பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சு மரம் பழுத்தாற் போன்றது.